10.10.2025

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்.

<u>அசல் வழக்கு எண்.**143/2020**</u>

**2025**-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 10-ம் நாள் வாதி/பிரதிவாதி என்பவரின் சாட்சியாகிய வா.சா.**1**-வது நபரின் வாக்குமூலம் **1969**-ம் ஆண்டு 54 வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி <u>திருமதி.**K**.காயத்ரி</u> என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜானகி | க/பெ. | லெட்சுமணன் |
| கிராமம் | அம்மம்பாளையம் | தாலுக்கா | துறையூர் |
| தொழில் | | சமூகம் | |
| வயது | 71 | நாள் | **10.10.2025** |

<u>முதல் விசாரணை</u>

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை நான் பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் நான் சொன்னவை தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். கீழ்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணமாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

01. 10.03.1975 தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் அசல். வா.சா.ஆ.1.

02. 18.09.2012 தேதியில் பிரதிவாதி பெயருக்கு சுப்பம்மாள், பெருமாள் இருவரும் சேர்ந்து எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல். வா.சா.ஆ.2.

10.10.2025



03. 19.11.2013 தேதியில் என் மகன் ரமேஷ் துறையூர் வட்டாட்சியர் அலுவலக பொது தகவல் அதிகாரிக்கு அனுப்பிய மனு நகல் அசல் வா.சா.ஆ.3.

04. 19.12.2013 தேதியிட்ட பொது தகவல் அதிகாரி அனுப்பிய பதில் அறிவிப்பு அசல் வா.சா.ஆ.4.

05. 30.05.2014 தேதியிட்ட துறையூர் வட்டாட்சியர் வழங்கிய கருத்துரை அறிக்கை அசல். வா.சா.ஆ.5.

06. தாவா சொத்தின் பேரில் எடுத்துக்கொடுத்த வில்லங்க சான்று அசல். வா.சா.ஆ.6.

07. 17.12.2014 தேதியிட்ட முசிறி கோட்டாட்சியர் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட பட்டாவை ரத்து செய்து பிறப்பித்த உத்தரவு அசல். வா.சா.ஆ.7.

08. இணையதள வழிகாட்டு மதிப்பு கணினி நகல். வா.சா.ஆ.8.

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

வழக்கறிஞர் கோரிக்கையை ஏற்று குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

/உண்மை நகல்/
ஒம்/-திரு.தி. அன்பு,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
துறையூர்.